DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw1 /Pw 1 / Murgan(Arulvannan) | Village | |
| Father Name | Amblavanan | Taluk | |
| Age | 52 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**08.01.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**மனு பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

சத்தியமாக சொல்கிறேன்.

சம்பவம் 10.06.2021 ம் தேதி நடந்தது.

இந்தசம்பவம் நடைபெறுவதற்கு காரணம் முதல் எதிரி திவ்யஸ்ரீ ஆவார்.

எனக்கு அன்று பணம் ரூ.19 லட்சம் வரபோகிறது என்று திவ்யஸ்ரீக்கு மட்டும் தான் தெரியும்.

மேலும் திவ்யஸ்ரீயிடம் ஆஜர் எதிரிகள் எந்த செயினும் நகையும் பறித்து கொண்டு செய்லவில்லை.

திவ்யஸ்ரீ முதல் எதிரியை மற்ற எதிரிகள் கட்டிப் போடவில்லை என்னை மட்டும் தான் கட்டி போட்டு எனது நகை மற்றும் பணத்தை திருடி சென்றார்கள்.

சம்பவத்தன்று எனது வீட்டிற்கு வந்தவர்கள் நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சென்னவாறு எனக்கு அடையாளம் தெரியும்.

ஆஜர் எதிரிகள் முகமூடி போட்டு வந்தார்கள் வர்கள் கண் மற்றும் மூக்கு மட்டும தான் தெரிந்தது அதை வைத்து கொண்டு பேப்பரில் அவர்கள் போட்டோவை பார்து கொண்டு அவர்கள் தான் என்பதை உறுதி செய்து கொண்டேன்.

நான் அவர்களை போட்டோ மற்றும் நேரில் பார்த்தால் கண்டுபிடிக்கும் அளவுக்கு முகமூடி அணிந்திருந்தார்கள்.

நான் காவல் நிலையத்திற்கு சென்று முதல் எதிரி திவ்யஸ்ரீ மீதும் அடையாளம் தெரியாத மற்ற எதிரிகள் மீதும் புகார் அளித்தேன்.

சாட்சி தான் புகார் சொல்ல சொல்ல வேறு ஒரு நபராண நரசிம்மன் என்பவர் எழுதினார். நான் சொன்னதை தான் அவர் எழுதினார்.

இன்று நீதிமன்றதத்தில் காட்டும் போட்டோவில் உள்ள வண்டி TN 70 AH5004 என்னுடைய வண்டிதான்.

அந்த வண்டியை யார் திருடிகொண்டு சென்றார்கள் என்று தெரியாது ஆனால் இந்த சம்பவம் நடந்தபோது தான் எனது வண்டி திருடு போனது.

அதனால் தான் இவர்கள் திருடிகொண்டு சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நான் பைனான்ஸ் செயவதால் அடிக்கடி என்து நகைகள் விற்பேன் வாங்குவேன் அதனால் இதற்கு முன்பு நான் தவறாக சொல்லிவிட்டேன்.

சம்பவத்தன்று எதிரிகள் எனது கழுதில் அணிந்திருந்த சுமார் 3 பவுன் கோதுமை செயின், சுமார் 3 ½ பவுன் மதிப்பிலான பிரேஸ்லெட் அது கொஞ்சம் பட்டையாக இருக்கும்.

மோதிரம் சுமார் 1 பவுன் அது எப்படி இருக்கும் என்று எனக்கு மறந்துவிட்டது.
மேலும் ½ பவுன் மேதிரங்கள் 3 அந்த மோதிரத்தின் டிசைன் எனக்கு தெரியாது.
நான் இந்த நகைகளை எப்போது எந்த நகைகடையில் இருந்து வாங்கினேன் என்று எனக்கு ஞபகம் இல்லை.

**நீதியின் பால் கருதி சாட்சி சொல்லும் சங்கதிகளில் சந்தேகம் இருப்பதால்**
சட்டப்பிரிவு 165 ன் இ.த.ச. கீழ் கீழ்கண்ட நீதிமன்ற கேள்விகள்.
1. நீங்கள் முதல் விசாரணையில் உங்கள் இடம் புகார் மனு அளிக்கப்பட்டது அந்த புகார் மனுவை பார்த்து இது நான் அளித்த புகார் இல்லை என்று குறிப்பிட்டு சாட்சியம் சொல்லிவிட்டு இப்போது நான் சொல்ல சொல்ல நரசிம்மன் என்ற ஒரு நபர் எழுதியாக கூறியுள்ளீர். நீங்கள் பி.ஏ வரை படித்துள்ளீர்கள் ஏற்கனேவே உங்கள் மீது பல குற்றவழக்குகள் உள்ளதால் நீதிமன்றம் என்றால் என்ன அதில் சாட்சியம் சொல்வது எவ்வளவு முக்கியதுவம் வாய்ந்தது போன்ற அனைத்து சங்கதிகளையும் தெரிந்து கொண்டு எதற்காக அவ்வாறு கூறீனீர்கள்.
நான் புகாரை பார்த்தவுடன் அது என்னுடைய கையெழுத்து இல்லை என்பதால் எனது முதல் விசாரணையில் மாற்றி சொல்லிவிட்டேன்.
நான் அதற்கு பின்பு யோசித்ததில் நான் தான் நரசிம்மனை கூட்டி கொண்டு சென்று புகார் அளித்தது ஞபகம் வந்தது.
2.நீங்கள் புகார் எழுதியதாக சொல்லப்படும் அப்பா பெயர் என்ன அவர் எங்கு வசிக்கிறார்.
எனக்கு நரசிம்மனின் அப்பா பெயர் தெரியாது அவர் எனக்கு 4 ஆண்டுகளாக பழக்கம்.
அவர் ஓசூரில் வேலை செய்து கொண்டிருந்தார் எந்த கம்பெனி என்று எனக்கு தெரியாது ஆனால் கெலமங்கலம் ஜீ.பி என்ற ஊரில் நேதாஜி நகரில் குடியிருந்தார்.
3. உங்களை காவலர்கள் கூடடி சென்றால் அவர் இருந்த வீட்டை காட்டமுடியுமா, என்றால் காட்டமுடியும்.
**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**
எனக்கு இந்த நீதிமன்றத்தில் என்னை மறு அழைப்பு செய்து சாட்சியம் அளிப்பதற்கு என்று சம்மன் சார்வு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.
நான் நீதிமன்றத்தில் சம்மனை கையொப்பம் இட்டுள்ளேன்.
சாட்சியிடம் அவர் முதல் விசாரணையில் கையொப்பம் இட்ப்பட்ட கையெழுத்து காட்டப்ட்டு கேட்டதில் அவர் ஆம் என்று கூறீனர்.
அவர் புகாரில் உள்ள கையயழுத்து காட்டி இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளாதா என்றால் சரியல்ல.
2 ம் என்னுடைய கையெழுத்து தான்.
போலீசார் எந்ததேதியில் எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பானை சார்வு செய்தார்கள் என்றால் எனக்கு போன் மூலியமாக எனக்கு தகவல் சொல்லி வரவழைத்தார்கள்.
நான் கெலமங்கலம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன்.
நான் குடியிருக்கும் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 1 ½ கி.மீ தூரம் தான் இருக்கும்.
நான் அரசாங்கத்தில் Permission பெற்று பைனான்ஸ் நடத்தவில்லை. நான் Un Register பைனான்ஸ் தான் நடத்தினேன்.
நீங்கள் சொன்ன தொகையை கேண்டில் பண்ணதை பொறுத்து இன்கம் டாக்ஸ் ரிட்னில் காட்டியுள்ளீர்களா மேலும் நீங்கள் Income tax asessee என்றால் நான் Income tax செலுத்துகிறேன்.

நான் இந்த வழக்கிற்கான புகார் அ.சா.1 மஞ்சுநாத் அறிவுரை பேரில் தான் நான் அளித்தேன்.
நான் இதற்கு முன்பு முதல் விசாரணையில் திவ்யாவை ஒரு ரூம்குள் பூட்டிவைக்கப்பட்டார் என்று சொலியிருந்தேன் அவர் அங்கிருந்தால் அவர் எவ்வாறு எனது கைகட்டை அவிழ்த்திருப்பார் என்றால் நான் ரூமில் வைத்து திவ்யாவை பூட்டியதாக கூறவில்லை திவ்யாவை ஒருரூமுக்குள் தள்ளியதாக தான் கூறினேன்.
நான் கூறுகிறேன் இதற்கு முன்பு 06.01.2025 ம் தேதி கூறியது தான் உங்களது உண்மையான சாட்சி இப்போது அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க உண்மையான சாட்சியத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
இன்று சாட்சியம் சொல்வதற்கு போலீசார் தான் என்னை அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இன்று வழக்கின் வாய்தா என்று போன வாய்தாவில் நீதிமன்றம் கூறியதை வைத்து நானே வந்தேன்.
என்மீது கெலமங்கலம் காவல் நிலையத்தில் பல குற்ற வழக்குகள் உள்ளன அதை வைத்து போலீசார் என்னை மிரட்டி பொய்சாட்சியம் சொல்லவைக்கிறார்ககள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

ஓம்./–திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.